**சுருக்கம்**

பணிக்குழு – தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் பணி – ஈரோடு மற்றும் வேலூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் – திட்டப்பணிகள் – பொறியியல் பிரிவில் கூடுதலாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களை அயற்பணி மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பியது – பின்னேற்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நப.3) துறை**

**அரசாணை (ப) எண். 221,** **நாள் 05.05.2010**

**படிக்கப்பட்டது:-**

1. ஆரசாணை(ப) எண்.438, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நப,3) துறை, நாள் 30.09.2009.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயல்முறை ந.க.எண்.11530/09/எப்1, நாள் 27.11.2009.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயல்முறை ந.க.எண்.48342/09/எப்1, நாள் 11.03.2010.
4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயல்முறை ந.க.எண்.48342/09/எப்1, நாள் 20.03.2010.

******

**ஆணை:-**

நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது செயற்குறிப்பில், முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பாதாள சாக்கடைத் திட்டப்பணிக்காக தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு பணியிடங்களில், தொழில்நுட்பம் சார்ந்த பணியிடங்களான செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர், வரைவாளர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் / பணி ஆய்வர் ஆகிய பணியிடங்களுக்கு நகராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களை அயற்பணி அடிப்படையில் / மாறுதலில் பணிபுரிய 30.10.2009–ற்குள் தங்களது விருப்பத்தினை தெரிவிக்குமாறு அனைத்து நகராட்சி ஆணையர்கள் / மாநகராட்சி ஆணையர்கள் / செயல் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர் என்றும் ஆனால் மேற்கண்ட திட்டத்தில் பணிபுரிய குறைந்த அளவிலேயே விருப்பம் தெரிவிக்கப்பட்டது என்றும், அவற்றில் இசைவு தெரிவித்த மூன்று பொறியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்றும் அனுபவ தகுதியும், திறமையும் உள்ள பணியாளர்கள் போதிய அளவில் இல்லாத காரணத்தினால், பணிமாறுதல் மூலம் அயற்பணியில் பணிபுரிய நகராட்சிகளிலிருந்தும் இன்ன பிறபொறியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் பெயர்ப்பட்டியல் பரிசீலிக்கப்பட்டு திட்டப்பணிகளை திறம்படவும், குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் (Time Bound Scheme) விரைந்து முடிக்கும் பொருட்டு தெரிவு செய்யப்பட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறைகளில், மாதவரம் நகராட்சியில் நகராட்சிப் பொறியாளர் திரு ப்பி.மனோகரன், வேலூர் மாநகராட்சிக்கு உதவி பொறியாளராகப் அயற்பணி ஒப்பந்த அடிப்படையில் பாதாள சாக்கடை திட்டப் பணிக்கு பணிமாறுதல் செய்யப்பட்டுள்ளார் என்றும், இதனைத் தவிர நிர்வாக நலன் கருதி, மேலே மூன்றாவதாகப்

படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயல்முறைகள் மூலம் ஈரோடு மற்றும் வேலூர் மாநகராட்சிகளுக்கு கீழ்க்கண்ட பொறியாளர்கள் அயற்பணி மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியிட மாறுதல் செய்யப்பட்டனர்.

| வ. எண். | பொறியாளரின் பெயர் | பதவி | பணிபுரிந்த இடம் | மாறுதல் செய்யப்பட்ட மாநகராட்சி / பதவி |
|---|---|---|---|---|
| 1. | திருமதி பி.ஆர்.சுகந்தி, | செயற்பொறியாளர் (திட்டம்) | ம.ந.நி.இயக்ககம், சேலம் | ஈரோடு மாநகராட்சி. செயற்பொறியாளர் |
| 2. | திரு டி.முருகானந்தம் | செயற்பொறியாளர் (திட்டம்) | ம.ந.நி.இயக்ககம், மதுரை | ஈரோடு மாநகராட்சி. செயற்பொறியாளர் |
| 3. | திரு டி.சுரேஷ்குமார், | நகராட்சி பொறியாளர் | பழனி | ஈரோடு மாநகராட்சி. ஊதவி செயற்பொறியாளர் |
| 4. | திரு பி.மோகன் | நகராட்சி பொறியாளர் | தர்மபுரி | ஈரோடு மாநகராட்சி. உதவி செயற்பொறியாளர் |
| 5. | திரு ஆர்.சி.பரமசிவம் | உதவி செயற்பொறியாளர் | நகராட்சி நிர்வாக இயக்ககம் | ஈரோடு மாநகராட்சி, உதவி செயற்பொறியாளர் |
| 6. | திரு பி.காதர் மொய்தீன் | உதவி செயற்பொறியாளர் | பேரூராட்சிகளின் நிர்வாகம் | வேலூர் மாநகராட்சி, உதவி செயற்பொறியாளர் |
| 7. | திரு கே.சீனிவாசன் | உதவி செயற்பொறியாளர் | நகராட்சி நிர்வாக இயக்ககம் | வேலூர் மாநகராட்சி, உதவி செயற்பொறியாளர் |
| 8. | திரு ரவிச்சந்திரன் | உதவி பொறியாளர் | கடலூர் | உதவி பொறியாளர், ஈரோடு மாநகராட்சி |
| 9. | திரு டி.ஆர்.சீனிவாசமூர்த்தி | உதவி பொறியாளர் | இராசிபுரம் | உதவி பொறியாளர், ஈரோடு மாநகராட்சி |
| 10. | திரு ஆர்.ஜெயக்குமார் | உதவி பொறியாளர் | கிருஷ்ணகிரி | உதவி பொறியாளர், வேலூர் மாநகராட்சி |
| 11. | திரு ஆர்.சந்திரசேகரன் | நகராட்சி பொறியாளர் | வந்தவாசி | உதவி பொறியாளர், வேலூர் மாநகராட்சி |

2. எனவே அவசர அவசியம் மற்றும் நிர்வாக நலன் கருதி பாதாள சாக்கடைத் திட்டப்பணிகளை திறம்படவும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் (Time Bound Scheme) முடித்திட வேலூர் மற்றும் ஈரோடு மாநகராட்சிகளுக்கு அயற்பணியில் ஒப்பந்த அடிப்படையில் செயற்பொறியாளர் / உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர்கள் பணியிட மாறுதல் செய்யப்பட்டதற்கு அரசின் பின்னேற்பினை வழங்கிடுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டது. பரிசீலனைக்குப் பின்னர் ஈரோடு மற்றும் வேலூர் மாநகராட்சிகளில், மேற்கொள்ளப்படும் பாதாள சாக்கடைத் திட்டத்தினை திறம்படவும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடித்திடவும், அவசர அவசியம் மற்றும் நிர்வாக நலன் கருதி திரு ப்பி.மனோகரன் உட்பட மேலே பத்தி 1–ல் குறிப்பிடப்பட்டுள்ள நகராட்சிகளில் / பேரூராட்சியில் பணியாற்றிய செயற்பொறியாளர் / உதவி செயற்பொறியாளர் / உதவி பொறியாளர்களை அயற்பணியில் ஒப்பந்த அடிப்படையில் பணியிட மாறுதல் செய்யப்பட்டதற்கு, பின்னேற்பு அளித்து அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசு செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை– 600 005
மாநகராட்சி ஆணையர், ஈரோடு / வேலூர் மாநகராட்சிகள்.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, குறளகம், சென்னை– 600 108.
**நகல்**
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
செயலர் அவர்களின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) பிரிவு, சென்னை – 600 009.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**பிரிவு அலுவலர்.**